Regd. No. M. 4593.

தனிப்பிரதி விலை { உள்நாடு 0-1-0 / பர்மா, மலேயா, 0-1-6 (6-காசு

# குடி அரசு

Estd 1924.

பக்கங்கள் 8. சனி வெளியீடு. வருட சந்தா { உள்நாடு ரூ. 5-0-0 / வெளிநாடு ரூ. 7-0-0

மாலை 20 } ஈரோடு 26-10-1946 ஐப்பசிமீ 10உ { மலர் 3

## மேல் நாடும் கீழ் நாடும்

### பெரியார் ஈ. வெ. ரா. சொற்பொழிவு

பெரியார் அவர்கள் வடநாட்டுச் சுற்றுப்பிரயாணம் சென்ற காலை அரித்துவாரம் கன்கல் கலைஞான சங்கத்தில், அரித்துவாரம் குருகுல காங்கிரி கம்பாரிடிவ் ரிலிஜன் புரபசர் அரிதத் வித்யாலங்கார் தலைமையில், "மேல்நாடும், கீழ் நாடும்" என்பது பற்றி ஆற்றிய சொற்பொழிவு:-

### மேல்நாடும் கீழ்நாடும்

தலைவரவர்களே! தாய்மார்களே!! சகாக்களே!!! நான் இந்த ஊருக்கு வந்து எதிர்பாராத விதமாய் இங்கு ஐந்து ஆறுநாள் தங்கும்படி நேர்ந்தது. இந்தச் சந்தர்ப்பத்தில் அகஸ்மாத்தாகச் சந்திக்க நேர்ந்த இந்தக் கலைஞான சங்கக் காரியதரிசி, தோழர் சங்கர் அவர்களும், நண்பர் சர்தார் சோம்தத் அவர்களும், இந்த ஊரில் நான் ஏதாவது ஒரு விஷயத்தைப்பற்றிச் சொற்பொழிவாற்ற வேண்டுமென்று சொன்னார்கள். மிகவும் வைதீகத் துறையில் பேர் பெற்ற இந்தப்புண்ணிய க்ஷேத்திரம் என்பதில், சன்னியாசிகளாலும், சாதுக்களாலும், வானப்பிரதாஸ்ரமத்தில் இருப்பவர்களாலும் நிறைந்துள்ள மக்கள் முன், நான் எந்த விஷயத்தைப்பற்றிப் பேச முடியும் என்று சொன்னேன். அதற்கு தோழர் சோம்தத் அவர்கள், இங்கு கூட்டம்போட்டு பேசியதே கிடையாது; ஆதலால், நீங்கள் உங்கள் இஷ்டப்படி எதுபற்றி வேண்டுமானாலும் பேசலாம் என்று சொன்னார்கள் நான் குறிப்பிட்ட எந்த விஷயத்தையும் பற்றிப் பேசாமல், "மேல் நாடும், கீழ் நாடும்" என்பதைப்பற்றிப் பேசுகிறேன் என்று சொன்னேன். அவர் சரியென்று ஒப்புக்கொண்டார். ஆகவே, இன்று அதைப்பற்றி நான் பேசுவதில் நீங்கள் ஏதோ ஒரு கதை கேட்பதுபோல் கருத வேண்டுமே ஒழிய, நான் எதையும் வலியுறுத்திச் சொல்லுவதாகக் கருதக்கூடாது. ஏனெனில், மிக வைதீகப்பற்றும், மதப்பற்றும் உள்ள உங்களுக்கு அங்கு நடக்கும் விஷயங்கள் பல திருப்தி இல்லாதவைகளாகத்தோன்றலாம். ஆதலால் நான் அதை வலியுறுத்துவதாகக் கருதாமல் அங்கு அப்படி நடக்கிறது; இங்கு இப்படி நடக்கிறது; என்கின்ற அளவில் மாத்திரம் கொள்ளவேண்டுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன்.

நான் பேசப்போகும் "மேல்நாடும் கீழ்நாடும்" என்ற தலைப்பின் கருத்து ஐரோப்பாவும் இந்தியாவும் என்பதாகும். இரண்டு நாட்டு நடப்புகளையும் எடுத்துச் சொல்லுவதில் இரண்டு நாட்டிலும் இருந்து வரும் மதம், கல்வி, அரசியல், பொருளாதாரம், சமுதாயம், தொழில் வாழ்க்கைத் திட்டம், சுகாதாரம் முதலிய விஷயங்களைப்பற்றிச் சொல்லுவது பொருத்தமாக இருக்கும் என்று நினைக்கிறேன்.

#### நாடு

#### மேல்நாடு

ஐரோப்பிய நாடு என்பது சற்றேறக்குறைய இந்தியாவைப் போன்ற விஸ்தீரணமும், ஜனத்தொகையும் கொண்ட நாடாகும். அதோடு, ஒரே மதம், கலை, நாகரிகம், சீதோஷ்ண நிலைமை, நடை, உடை, ஆகாரம் முதலியவைகளில் பேதம் இல்லாமல் இருக்கும் நாடாகும். அப்படியெல்லாம் இருந்தும் இப்போது சுமார் 30 தனி தேசங்களாகப் பிரிக்கப்பட்டு, தனித்தனி சுதந்திர நாடுகளாகவும், ஒன்றுக்கொன்று எவ்வித சம்பந்தமில்லாத பூரண சுயேச்சை நாடுகளாகவும் இருந்து வருகிறது. அப்படி பிரிக்கப்பட்டிருப்பதற்குக் காரணம், நான் அறிந்தவரை பாஷையைத் தவிர வேறு ஒன்றும் சொல்ல முடியவில்லை. ஒரு பாஷைபேசும் நாட்டுக்கும் மற்றொரு பாஷை பேசும் நாட்டுக்கும் எவ்விதசம்பந்தமும் இல்லாமல் செய்யப்பட்டிருக்கிறது. மதம் ஒன்றாக இருந்தாலும், ஒரு நாட்டான், மற்றொரு நாட்டானை ஒரு சமுதாயத்தான் என்று அங்கு கருதுவதில்லை. அந்த மக்களை உண்மையில் எந்த நாட்டினர் என்றுகூட கண்டுபிடிக்க முடியாது. அங்கு எந்த நாட்டிலும் மக்களுக்குள் உயர்வு தாழ்வு என்பது இல்லவே இல்லை. எந்த நாட்டிலும், எந்த நாட்டுப் பெண்ணையும் மணம் செய்துகொள்ளுவான். இப்படி எல்லாம் இருந்தும், அவர்கள் ஒரு நாட்டுக்கு ஒரு நாடு எவ்வித சம்பந்தமும் இல்லாமல் பிரவேசிக்க முடியாதபடியும், ஒரு நாட்டுச் சாமான் மற்றொரு நாட்டுக்குள் சுங்கமில்லாமல் வரமுடியாதபடியும், தனித்தனி ராணுவ முஸ்தீபுகளுடன் இருந்து வருகிறார்கள். அனேகமாக அந்தந்த நாட்டுக்குத் தேவையான வஸ்துக்களை அங்கங்கே உற்பத்திசெய்துகொள்வதையே தேசியம் என்று கருதுகிறார்கள்.

ஒரு பாஷைக்காரன் மற்றொரு

பாஷைக்காரன்மீது ஆதிக்கம் செலுத்துவதையோ ஒரு நாட்டான் மற்ற நாட்டான்மீது ஆதிக்கம் செலுத்துவதையோ அடிமைத்தனம் என்று கருதுகிறான். ஒரு ஜாதியான், மற்ற ஜாதியைச் சுரண்டுவதைக் கொள்ளை என்று கருதுகிறான்.

உதாரணமாக இங்கிலாந்துக்காரன் அயர்லாந்து மக்கள்மீது ஆதிக்கம் செலுத்துவதையும், இங்கிலாந்து சாமான் அயர்லாந்தில் இறக்குமதி ஆவதையும் அடிமைத்தனம் என்றும் வியாபாரக் கொள்ளை என்றும் கருதுகிறான். ஜெர்மனி குடியாய் இருந்து, ஜெர்மனி மக்களை யூதர்கள் சுரண்டுவதை, யூதர் கொள்ளை என்று கருதுகிறான். இப்படியே நாட்டுக்குநாடு, பாஷைக்குப்பாஷை, இனத்துக்கு இனம் எவ்வித சம்மந்தமும் வைத்துக்கொள்ளாமல் தனித்து நின்று, தங்கள் சமுதாயத்தையும், தங்கள் நாட்டையும், தங்கள் பொருளாதாரத்தையும் காப்பாற்றிக் கொள்ளுகிறார்கள்.

## கீழ்நாடு

இந்த விஷயங்களில் இந்தியாவுக்கு ஒரு கொள்கையும் இல்லை. இந்தியாவின் சீதோஷ்ணஸ்திதி வேறு வேறு; இந்திய மக்கள் பல இனத்தினர்; பல மதத்தினர், அம்மதங்களும் ஒன்றுக்கொன்று மாறானவை. இந்தியாவின் தனிப்பட்ட பாஷைகள் பல; நடை உடை ஆகாரம் பலவிதம், இந்தியமக்களுள் ஜாதி வகுப்புகள் பல மனிதனுக்கு மனிதன் உயர்வு தாழ்வு என்பது சொல்ல முடியாததும் சகிக்க முடியாததுமாகும். ஒரு வகுப்புக்குள் ஒரு வகுப்பு மணம் செய்துகொள்ள முடியாத பேதமும், ஒரு ஜாதியாரை ஒரு ஜாதியார் ஆதிக்கம் செலுத்துவதும், ஒரு ஜாதியை ஒருஜாதி சுரண்டுவதும், ஒரு நாட்டை மற்றொரு நாடு வற்ற அடிப்பதும், சுரண்டுவதும் அளவிட முடியாததாகும். ஒரு நாட்டுக்கு ஒரு நாடு எதில் ஒற்றுமை என்றும், எந்த விஷயத்தில் பொது இலட்சியம் என்றும் எதில் ஒன்றுபோல் நடக்கிறார்கள் என்றும், எதில் பொது உணர்ச்சி என்றும் சொல்லி ஆதாரம் காட்டுவது என்பது சுலபத்தில் முடியாததாகவே இருந்து வருகிறது.

இந்தியா சுமார் 500 வருஷங்களுக்கு முன்வரையில் என் வெள்ளையன் வருகிறவரையில் சில சந்தர்ப்பங்கள் தவிர, இனம், பாஷை, சீதோஷ்ண நிலை, பூர்வீகநாடு முதலியவைகளுக்கு ஏற்றபடி தனித்தனி நாடுகளாக இருந்துவந்த நாடாகும்.

இப்படியெல்லாம் இருக்கக்கூடிய இந்தியா நாடு என்பது எவ்வித நன்மைக்கும் பயன் படாத மாதிரியில் ஒரே நாடாகப் பிணைக்கப்பட்டிருக்கிறது. பிணைக்கப்பட்டிருப்பது மாத்திரமல்லாமல், எவ்வித அவசியமும் இல்லாத முறையில் ஒரு பாஷை, ஒரு இனம், ஒரு நாகரிகம், கலை உள்ள நாட்டை பலநாடாகப் பிரிக்கப்பட்டு வேறுபடுத்தியும் இருக்கிறது. இம்மாதிரி பொருத்தமில்லாதவற்றை ஒன்றுபடுத்தி இருப்பதற்கும், பொருத்தமுள்ளதை வேறுபடுத்தி இருப்பதற்கும் சரித்திர சம்பந்தமானதோ அல்லது அவசிய சம்பந்தமானதோ ஆகிய காரணம், அவ்வப்போது படையெடுத்துவந்து வென்ற அரசர்கள் ஒன்று சேர்த்ததும் பிரித்ததும் தவிர வேறு ஒரு காரணமும் தென்படவில்லை.

உதாரணமாக, இன்று மலையாளம் 3 தனி நாடாக ஒன்றுக்கொன்று சம்பந்தமில்லாத தனி ஆட்சி நாடாக இருந்து வருகிறது. அதாவது திருவாங்கூர், கொச்சி, மலபார் என்று மூன்று நாடுகளாக இருக்கிறது; அதுபோல், வடநாட்டிலும் அனேகம் இருக்கின்றன. மொத்தத்தில் இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சி தவிர, மேற்கொண்டு 584 நாடுகள் அந்தந்த நாட்டு அரசர்களால் மற்ற நாட்டுக்குச் சம்பந்தமில்லாத தனி ஆட்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன. ஒரே இனம், ஒரே நாகரிகம், ஒரே பாஷை உள்ள மலையாளம் 3-நாடுகளாக ஆளப்படுவதும், பல இனம், பல நாகரிகம், பல பாஷை, பல கலை, பல மதம் உள்ளநாடுகள் ஒன்று சேர்க்கப்பட்டு, ஒரே முறையான ஆட்சியில் இருப்பதும் எப்படி பொருத்தமானதாக இருக்கமுடியும்? எனவே அரசாளுவோர் சௌகரியத்துக்கு ஏற்றபடி நாடுகளையும் மக்களையும் பிணைத்திருக்கிறார்கள் என்று சொல்ல முடியுமே தவிர, மேல் நாட்டைப்போல் நாட்டிற்கும், மக்களுக்கும் பாஷை இனம், சௌகரியம் ஆகியவைகளுக்கும் தக்கபடி நாடுகள் ஆட்சி நடத்தப்பட்டு வருகின்றன என்று சொல்ல முடியாது.

ஜெர்மனியும் இங்கிலாந்தும் ஒரு மதம், ஒரு இரத்தக் கலப்புள்ள நாடுகள். அவை ஒன்றுக்கொன்று எந்த விதத்திலும் ஒன்றின் ஆதிக்கம் ஒன்றின்மேல் இருக்கக்கூடாது என்பதற்காக, அழிந்துபோகிறவரை போராடிப் பார்ப்பது என்று கங்கணம் கட்டிக்கொண்டு இன்று யுத்தக்களத்தில் மடிகின்றன. இதன் பயனாய், மற்றும் பல நாடுகளும் இதே காரணத்துக்காகப் போராட்டத்தில் கலந்து தொல்லைப்படுகின்றன.

நம் நாட்டின் சில ஜில்லாக்களைப் போன்ற விஸ்தீரணம் உள்ள நாடுகள் தனிநாட்டு உணர்ச்சியின் பயனாகவே போராட்டத்தில் கலந்து தொல்லைப்படுகின்றன. அவைகளுக்கு நல்ல ஆட்சியைவிட தன் நாட்டு உணர்ச்சியே பிரதானமாய் இருந்துவருகிறது. இதனால் அவைகள் கல்வி, செல்வம், கைத்தொழில் பாதுகாப்பு, தனிநாட்டு நன்மைக்குக்கு ஏற்ற ஆட்சி முதலியவைகளில் உலகிலேயே யாருக்கும் இளைத்திருக்காத சமநிலை அடைய முடிந்திருக்கிறது.

பழையகால ஆட்சிமுறை எப்படி இருந்தது என்பதைப்பற்றி சிந்திக்கக் கூட அவர்கள் நேரம் செலவழிப்ப இல்லை, பிற்கால ஆட்சி எப்படி இருக்கவேண்டும் என்பதே அவர்கள் சிந்தனையாக இருந்து வருகிறது

## மதம்

### மேல்நாட்டில் மதம்

மேல்நாட்டில் மக்கள் மதத்துக்கும் வாழ்க்கைக்கும் சம்பந்தமில்லாமல் ஆக்கிக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய நடை, உடை, ஆகாரம், கல்வி, பாவனை, மணம், சடங்கு முதலிய காரியங்களில் மதத்துக்குப் பெரிதும் இடம் இல்லை. அங்கு எந்த மனிதனைக் கண்டாலும் அவன் எந்த மதம் என்று கண்டுபிடிக்க முடியாது. மதம் சரீரத்துக்கு உள் பக்கமே தவிர, சரீரத்துக்கு வெளியில் ஒன்றும் தெரியாது. வாழ்க்கையில் மதத்தைப் புகுத்தமாட்டார்கள். ஐரோப்பா பூராவும் ஒரு மதம்தான்; அதற்கு ஒரு பைபிள் (வேதம்)தான்; அதற்கும் ஒரே கர்த்தாதான்; அதைப்

(தொடர்ச்சி 7ம் பக்கம்)

# எல்லைப்புறத்தில் ஏற்பட்ட தொல்லை!

பண்டிட் நேருவுக்கு எல்லைப்புறத்தில் கிடைத்த வரவேற்பு, சைமன் கமிஷனுக்குக் காங்கரசிடம் கிடைத்த வரவேற்பையும் மிஞ்சிவிட்டது.

கறுப்புக்கொடிகள், 7 அடி நீள ஈட்டிகள், வாள்கள் முதலியவற்றைத் தாங்கிய முஸ்லிம்கள், "நேருவே திரும்பிப்போ!", "காங்கரஸ் ஒழிக!" என்று கூச்சலிட்டு ஆரவாரம் செய்திருக்கின்றனர்.

பண்டிட் நேரு பிரயாணஞ் செய்த மோட்டார்கள்மீது கல்வீச்சும், துப்பாக்கிப் பிரயோகமுங்கூட நடைபெற்றிருக்கிறது.

காங்கரஸ் இந்திய மக்கள் 40 கோடிக்கும் பிரதிநிதி ஸ்தாபனம் என்கிறார்கள், காங்கரஸ்காரர்கள்! எந்த நாட்டிலும் இம்மாதிரியாகக்கூறும் அரசியல் கட்சியே கிடையாது! அமெரிக்காவிலும் 2-முக்கிய அரசியல் கட்சிகள் இருக்கின்றன; ப்ரான்சில் 4-முக்கிய கட்சிகள் உண்டு; இங்கிலாந்தில் மூன்று முக்கிய கட்சிகள் உண்டு; கனடாவிலும் உண்டு! ஆனால் இந்தியாவில்மட்டும் காங்கரசே எல்லா மக்களுக்கும் பொதுவான ஓர் அமைப்பாம்! காங்கரசுக்கு பிரசார இயந்திரம் பலம் பொருந்தியது! மக்களோ 100-க்கு 90-பேர் எழுதப்படிக்கத் தெரியாதவர்கள்! ஆதலால் காங்கரஸ்காரர் எது வேண்டுமானாலும் கூறலாம்!

காங்கரஸ் கட்சியின் ஏகப்பிரதிநிதித்துவ உரிமைக்கு (வங்காளத்திற்கும், பம்பாய்க்கும் அடுத்தபடியாக) எல்லைப்புறம் பதில் கூறிவிட்டது!

எல்லைப்புற முஸ்லிம்களில் பெரும்பகுதி லீகைச் சேர்ந்தவர்கள்; சிறு பகுதி, காங்கரஸ் கட்சியைப் பின்பற்றுபவர்களாயிருக்கலாம். காங்கரஸ்கட்சிக்கு இன்னும் அதிகமான முஸ்லிம் க்விஸ்லிங்குகளைச் சேர்ப்பதற்காகவே, தோழர் கபர்கான் அழைப்பின்மீது பண்டிட் நேரு அங்கே சென்றார். வைஸ்ராயும், எல்லைப்புற முதன் மந்திரியும் போகவேண்டாம் எனத் தடுத்தார்களாம்!

"நிகரற்ற வீரர் நேரு அஞ்சா நெஞ்சுடன் பவனி வந்தார்" என்று காங்கரஸ் ஏடுகள் வர்ணிக்கின்றன! பொதுக்கூட்டங்களிலிருந்து வெளியேறும் போது, காங்கரஸ் தொண்டர்களைக்கூடப் புறக்கணித்துவிட்டு, காட்டில் செல்லும் சிங்கம்போல, கூட்டத்தில் புகுந்து சென்று மோட்டாரில் ஏறுபவர், பண்டிட் நேரு! ஆனால் எல்லைப்புறத்தில் எப்படிச் சென்றார்? முன்னே போலீசும், பிரிட்டிஷ் இராணுவமும்! பின்னே வெள்ளை இராணுவம்! பொதுஜனத் தலைவரும், அகில இந்திய தேசிய ஸ்தாபனத்தின் முடிசூடா மன்னருமான பண்டிட்நேரு இவ்வளவு தற்காப்புடன் சென்றுங்கூட, சிறு காயங்களுடன் திரும்ப வேண்டி நேரிட்டது பரிதாபத்திற்குரியது!

இவரது சுற்றுப்பிரயாணத்தில் ஓரிடம் தவறாமல், பீரங்கிக் குண்டுகளும், துப்பாக்கிக் குண்டுகளும் பிரயோகிக்கப்பட்டிருக்கின்றன. 'இவரது உயிருக்கு ஆபத்து நேரிடக்கூடாது; எதிர்ப்பை மட்டுமே காட்டிக்கொள்ளவேண்டும்" என்ற எண்ணத்தின் மீதே இவரது எதிரிகள் மிரட்டியிருக்கின்றனர் என்பது தெளிவு!

இவர்களுடைய முறைகள் ஓரளவு முரட்டுத்தனமானவைகளாய் இருக்கலாம், ஆனால் இவர்களது இன உணர்ச்சியை மட்டும் நாம் மறக்கமுடியாது. "ஜனாப் ஜின்னாதான் எங்கள் தலைவர்; நீங்களல்ல!" என்று இவர்கள் கூறியது பண்டிட் நேருவுக்கு நல்ல படிப்பினையாக இருந்திருக்கவேண்டும்.

இல்லாவிட்டால், சுற்றுப் பிரயாணத்தின் இறுதியில், "இந்தியாவிலுள்ள ஒவ்வொரு இனமும் சுயேச்சையுடன் வாழ வேண்டியதே எனது லட்சியம்" என்று கூறியிருப்பாரா?

## ஆரிய வைசிய சங்கத்தில்

### பார்ப்பனப் புரோகித விலக்கு

சேலம் செவ்வாய்ப்பேட்டையில் 7-10-46ல் தோழர் ஈ. ஆர். கிருட்டிணன் அவர்களும், தோழியர் சரசுவதி அம்மையாரும் பார்ப்பனப் புரோகிதத்தை அறவே யொழித்து வாழ்க்கை ஒப்பந்தம் செய்துகொண்டனர். பல சமூகத்தார்களின் எதிர்ப்புக்கிடையே திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

அத்திருமணத்தையொட்டி அன்று மாலை வழக்கறிஞர் தோழர் பி. சீராமலு அவர்கள் தலைமையில் ஓர் பாராட்டுக்கூட்டம் நடைபெற்றது. சே. எம். பாலவெங்கட்டராமன் ஆர். பஞ்சநாதம், டாக்டர் கே. ஆர். கோபால், கே. ஆர். கனகரத்தினம ஆகிய தோழர்கள் பார்ப்பன ஒழிப்பின் இன்றியமையாமை குறித்தும் பெண்கள் முன்னேற்றம் குறித்தும் சொற்பொழிவாற்றினார்கள். "இன்று முதல் நம் சமூகத்தில் பார்ப்பனப் புரோகிதத்தை ஒழித்து, நம் சமூகப் புரோகிதரைக் கொண்டே எல்லா சடங்குகளும் நடத்த வேண்டும்' என்ற தீர்மானம் தோழர் சே. எம். பாலவெங்கட்டராமன் அவர்களால் கொண்டுவரப்பட்டு ஏகமனதாய் நிறைவேற்றப்பட்டது.

அத்திருமணத்தின் நினைவாக குடியரசு, திராவிடநாடு, விடுதலை ஆகிய பத்திரிகைகளுக்குத் தனித்தனியே 5-ரூபாய் நன்கொடையளிக்கப்பட்டது.

# குடி அரசு

1946-ஞூ அக்டோபர்மீ 26உ


## முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்

இடைக்கால சர்க்காரில் முஸ்லிம்லீகும் பங்கு கொண்டுள்ளது. இடைக்கால சர்க்காரில் முஸ்லிம் லீகின் சார்பில் 5 உறுப்பினர்களைத்தான் நியமிக்கலாம் என்ற திட்டத்தை முஸ்லிம் லீக் ஏற்றுக்கொண்டது. ஆனால் அந்த உறுப்பினர்களில் தாழ்த்தப்பட்டோர் இயக்கத்தைச் சேர்ந்த ஒருவரையும் சேர்த்துள்ளனர் முஸ்லிம் லீகர்கள். தாழ்த்தப்பட்டோர் இயக்கத்தைச் சார்ந்தவரை இடைக்கால சர்க்காரில் உறுப்பினராக நியமிப்பதற்கு முஸ்லிம் லீகுக்கு உரிமையில்லையென்று காங்கரஸ்காரர்கள் ஓலமிடுகின்றனர்.

இந்நேரத்தில் வேவல் துரையால் வெளியிடப்பட்ட இடைக்கால சர்க்கார் ஏற்படுவதற்கான திட்டத்தை அலசிப் பார்க்க வேண்டியவர்களாகின்றோம். சாதி இந்துக்களின் சார்பில் காங்கரஸ்காரர்கள் 5 உறுப்பினர்களையும், முஸ்லிம்களின் சார்பில் முஸ்லிம் லீகர்கள் 5-உறுப்பினர்களையும், சீக்கியர்கள், கிருஸ்தவர்கள், பார்சியர்கள், தாழ்த்தப்பட்டோர்கள் ஆகியவர்களின் சார்பில் ஒவ்வொரு உறுப்பினராக நான்கு உறுப்பினர்களை வேவல் துரையும் இடைக்கால சர்க்காரின் உறுப்பினர்களாக நியமிப்பதென்று வேவல் திட்டத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது.

அந்நேரத்தில் "இந்தியாவிலுள்ள எல்லா மதத்தினர்க்கும் ஏகபோக பிரதிநிதித்துவம் வாய்ந்த ஸ்தாபனம் காங்கரசேயொழிய சாதி இந்துக்களுக்கு மாத்திரம் பிரதிநிதித்துவம் வைப்பது காங்கரஸ் அல்ல" வென்று தைரியமாகக் காங்கரஸ்காரர்கள் கூறவில்லை.

அவர்கள் கூறிவந்ததெல்லாம் முஸ்லிம்களின் சார்பில் தாங்களும் ஓர் உறுப்பினரைத் தேர்ந்தெடுத்து இடைக்கால சர்க்காருக்கு அனுப்புவோம் என்பதுதான். அதை முஸ்லிம் லீகர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. முஸ்லிம் மக்களின் நன்மைக்காகப் பாடுபடுவது முஸ்லிம்லீக் ஒன்றுதான் என்பதை லீகர்கள் நன்கு எடுத்துக்கூறி வந்தனர். அவர்கள் கூறியதில் நியாயம் இருக்கின்றது. முஸ்லிம் லீகின் சார்பில் தேர்தலுக்கு நிறுத்தி வைக்கப்பட்ட அத்தனை பேரும் தேர்தலில் வெற்றிபெற்றள்ளனர்.

எனவே முஸ்லிம் லீகை, முஸ்லிம்கள் அத்தனை பேரும் பின்பற்றுகின்றனர் என்பது நன்கு புலனாகின்றது. இருந்தபோதிலும் 'குலத்தைக் கெடுக்க வந்த கோடாலிக்காம்புகளைப் போன்ற சில தேசிய முஸ்லிம்களைக் காங்கரஸ்காரர்கள் காட்டி, அவர்கள் காங்கரஸ் இயக்கத்தைப் பின்பற்றுகின்றவர்கள் என்று கூறி அவர்களின் சார்பில் காங்கரஸ்காரர்கள் ஒரு உறுப்பினரை நிறுத்திவைப்பதற்கு உரிமையுண்டு என்றனர்.

அதையொட்டி பல பேச்சுக்கள் நடைபெற்றன. வேவல் ஜவகர் சந்திப்புகள், வேவல் காந்தி சந்திப்புகள், வேவல் ஜின்னா சந்திப்புகள் போன்ற பல சந்திப்புகள் உண்டாயின. எனினும் பயன்பெற முடியவில்லை.

நாட்டிலேயுள்ள இரு பெருங் கட்சிகளாகிய காங்கரசும், முஸ்லிம் லீகும் ஏகோபித்து ஓர் முடிவிற்கு வந்தால் தான் இடைக்கால சர்க்கார் ஏற்படும் என்று வேவல் முதலில் கூறிவந்தார். ஆனால் இரு பெருங் கட்சிகளிடையே ஒற்றுமை ஏற்படாததைக்கண்ட வேவல் காங்கரஸ்காரர்களைக்கொண்டே இடைக்கால சர்க்கார் ஏற்படுத்த உத்திரவிட்டார். அதன் பயனாக இடைக்கால சர்க்கார் ஏற்பட்டது.

இடைக்கால சர்க்காரில், உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அத்தனைபேரும் அநேகமாகக் காங்கரஸ்காரர்களாலேயே தேர்ந்தெடுக்கப்பட்டனர். அவர்கள் அத்தனை பேரும் காங்கரஸ்காரர்களே என்று கூறிவிடலாம். கிருஸ்துவர், பார்சியர், தாழ்த்தப்பட்டோர், சீக்கியர் ஆகியோரின் சார்பில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் அனைவரும் தன்மானத்தை விற்றாவது காங்கரஸ் ஆதரவை நாடுபவர்கள். வேவல் திட்டத்தில் சீக்கியர், தாழ்த்தப்பட்டோர், கிருஸ்தவர், பார்சியர் ஆகியோரின் சார்பில் வேவலே உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பார் என்றிருந்தபோதிலும், காங்கரஸ்காரர்களே பின்னர் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்துள்ளனர். இதற்கு வேவலும் அனுமதி தந்துள்ளார். முதலாளி, பணக்காரன், உயர்ந்த சாதிக்காரன் ஆகியோரின் கூட்டுஸ்தாபனமாகிய காங்கரசும், வேவலும் சேர்ந்து கொண்டு நடத்தும் நாடகத்தினால் முஸ்லிம்களுக்கு யாதொரு நன்மையும் ஏற்படாதென்றுணர்ந்த முஸ்லிம் லீகர்கள் வெள்ளையனிடத்தில் நேரிடையான போர் நடத்துவதென்று முடிவுகட்டினார். அம்முடிவின்படி நேரடி நடவடிக்கை நாளும் இந்தியா பூராவும் கொண்டாடப்பட்டது. பாக்கிஸ்தானைப் பெறுவதற்கு வெள்ளையனிடத்தில் நேரடி நடவடிக்கை எடுத்துக்கொள்ளப் போகின்றோம் என்று

லீகர்கள் கூறியதை, காங்கரஸ்காரர்கள், இந்துக்களிடம் போர் தொடுக்கத்தான் லீகர்கள் நேரடி நடவடிக்கையிலிறங்குகின்றார்கள் என்று தப்புப் பிரச்சாரம் செய்தனர். அதன் விளைவாக நாடெங்கும், குறிப்பாக வங்காளத்தில் பெருங்குழப்பம் நடந்தது. வங்காளத்தில் முஸ்லிகள் நேரடி நடவடிக்கை நாள் கொண்டாடுங்கால் அவர்கள் பேரில் இந்துக்கள் வலிய சண்டைக்கு கிளம்பினார்கள். அதன் விளைவாக 5000 மக்களுக்குமேல் உயிர் துறந்தனர். மேலும் வங்காளத்தில் ஏற்பட்ட குழப்பத்தின் வாடை இந்தியா முழுவதும் அடிக்கும் அறிகுறிகள் தெரின்றின.

இந்த நேரத்தில் வைஸ்ராயிக்கும் ஜின்னாவுக்கும் சில ஒப்பந்தப்பேச்சுக்கள் நடைபெற்றன இந்தியாவில் இந்து முஸ்லிம் கலவரங்கள் நடைபெறுமானால் மாண்டொழிகின்றவர்கள் அனைவரும் இந்தியாவில்பிறந்தவர்கள். எனவே இந்தியாவில் பிறந்தவர்கள் மாண்டொழிவதைச் சகியாத ஜின்னா வேவலிடத்தில் ஓர் சமரச முடிவிற்கு வந்தார். அதன் காரணமாக இடைக்கால சர்க்காரில் பங்கு கொள்ள முஸ்லிம் லீகர்களும் சம்மதித்தனர். அதன்படி முஸ்லிம் லீகர்கள் 5-உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்து இடைக்காலசர்க்காருக்கு அனுப்பினர். அந்த ஐவர்களில் ஒருவர் தாழ்த்தப்பட்டவரினத்தைச் சேர்ந்தவர். அவரை ஜின்னா தேர்ந்தெடுத்து இடைக்கால சர்க்காரில் பங்கு கொள்ளச் செய்ததைக் கண்டு காங்கரஸ்காரர்கள் பொறாமைப் படுவது மாத்திரமன்றி ஜின்னாவுக்கு சிறுபான்மைக்கட்சியைச் சேர்ந்த ஒருவரைத் தேர்ந்தெடுக்க உரிமையில்லை என்று ஓலமிடுகின்றனர்.

ஜின்னா பாக்கிஸ்தான் திட்டத்தைக்கொண்டுவந்த அந்தக் காலத்திலேயே இந்தியாவிலுள்ள சிறுபான்மைக் கட்சியினர் அனைவருடைய சார்பிலும் அவர்கள் உரிமைக்காகப் போராடுவேன் என்று கூறியுள்ளார். அவர் அன்று கொடுத்த வாக்குறுதியை இன்று நடைமுறையில் நிறைவேற்றி வைத்துள்ளார். அப்படியிருக்க அதைப்பற்றி ஆட்சேபனை செய்வதற்குக் காங்கரஸ் காரர்களுக்கு என்ன உரிமை இருக்கின்றதென்று கேட்கின்றோம்.

காங்கரஸ்காரர்களும் அவர்களின் சர்வாதிகாரியான காந்தியாரும் தாழ்த்தப்பட்ட மக்களுக்குத் தாங்கள்தான் பிரதிநிதித்துவம் வாய்ந்தவர்கள் என்று கூறுவது உண்மையானால் ஏன் ஒரு தாழ்த்தப்பட்டவர் இடைக்கால சர்க்காரில் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டமை குறித்து மகிழ்ச்சி கொண்டிருக்கக்கூடாது? அதைவிடுத்துக் காந்தியார் தன் பிரார்த்தனைக்கூட்டத்தில், தாழ்த்தப்பட்டவர் இடைக்கால சர்க்காரில் அங்கம் வகிப்பதை ஆட்சேபித்துப் பேசியுள்ளாரே! பிறகு தாழ்த்தப்பட்டவர்களுக்குக் காங்கரஸ்தான் பிரதிநிதித்துவம் வாய்ந்த ஸ்தாபனம் என்று கூறுவதில் அர்த்தமில்லையே. இன்று இந்தியாவில் 6-கோடி தாழ்த்தப்பட்டவர்கள் உள்ளார்கள் என்றால் அவர்களில் 100க்கு 99பேர் தாழ்த்தப்பட்டோர் சம்மேளனத்தைத் தானே ஆதரிக்கின்றார்கள்? வேண்டுமானால் தாழ்த்தப்பட்டோர் கட்சியின் சார்பில் தேர்தலுக்கு நின்றவர்கள் தோல்வியுற்றிருக்கலாம். அதற்குக் காரணம் பூனா ஒப்பந்தந்தான் என்பது யாவருக்கும் தெரிந்த ஒரு உண்மை. இந்த உண்மையை எவராலும் மறுக்கமுடியாதென்பதையும் நாம் உணர்வோம். உண்மை அவ்வாறிருக்க காங்கரஸ்இயக்கம் தாழ்த்தப்பட்டவர்களின் பிரதிநிதித்துவம் வாய்ந்த ஓரியக்கம் என்று சொல்வது உலகத்தை ஏமாற்றுவதற்தேயன்றி வேறொன்றுமில்லை என்று உறுதியாகக் கூறலாம்.

எனவேதான் பலவகையாகக் காங்கரஸ்காரர்களால் புறக்கணிக்கப்படுகின்ற தாழ்த்தப்பட்டவர்களுக்கு ஜின்னா ஆதரவு காட்டுகின்றார். ஜின்னா ஆதரவு காட்டும் வகையில் காங்கரஸ்காரர்களின் உண்மையான சொரூபம் வெளிக்கிளம்பிவிட்டது. இனியாவது உலகம் உணர்ந்துகொள்ளட்டும், காங்கரசின் 'கபடநாடகத்தை.

மேலும் எந்த முஸ்லிமையும் இடைக்கால சர்க்காரில் உறுப்பினராக நியமிக்கக் காங்கரசுக்கு உரிமையில்லை என்று ஜின்னா கூறியும் காங்கரஸ்காரர்கள் ஒரு முஸ்லிமை உறுப்பினராக நியமித்திருக்கின்றனர். அதுமாத்திரம் நியாயமா என்று கேட்கின்றோம்.

மேலும் வேவலால் நியமிக்கப்படுவதாகக் கூறப்பட்ட சீக்கியர், கிருஸ்வர், பார்சியர், தாழ்த்தப்பட்டோர் ஆகியவர்களின் பிரதிநிதிகள் காங்கரசால் நியமிக்கப்பட்டனரே அது மாத்திரம் நியாயமா என்று கேட்கின்றோம்.

இன்று தாழ்த்தப்பட்டோரை முஸ்லிம்கள் ஆதரிக்கின்றனர். அந்த வகையிலே தாழ்த்தப்பட்டோர் நன்மை பெறுவர் என்பது திண்ணம். ஒரு வேளை 6-கோடி தாழ்த்தப்பட்டவர்களும்கூட முஸ்லிம்களாக மாறிவிடுவார்களோ என்று நினைக்க வேண்டியிருக்கின்றது. அப்படி மாறிவிட்டால்கூட ஒன்றும் முழுகிவிடாது என்று கருதுகிறோம். காரணம் அவர்

கள் ஜாதி இந்துக்களால் கொடுமை படுத்தப்படுவதுதான். கருப்ப சாப்பான் காதர்வுசேன் சாகிப்பாக மாறிவிட்டால், கனக சுப்பரமணிய ஆய்யர் 'டேய் கருப்பா! எட்டி நில்' என்று கூறுவதை விடுத்து, வாங்க சாகிப், சௌக்கியந்தானா?" என்று கேட்பார்.

இந்த நேரத்தில் பொதுமக்களுக்கு மற்றுமொன்று ஞாபக மூட்ட விழைகின்றோம். இப்போது காங்காஸ்காரர்களின் இடைக்கால சர்க்கார் என்பது போய் எல்லார்க்கும் பொதுவான இடைக்கால சர்க்கார் ஆய்விட்டது. ஜவகர் தன் விருப்பம்போல் இனி நடக்க முடியாது. காங்கரஸ்காரர்கள் முஸ்லிம்களுக்கு முன்னரே பல பாடம் கற்பித்துள்ளனர். ஜவகர் தான்தோன்றித் தம்பிரானாய் விருப்பம்போல் காரியங்கள் செய்வாரானால் முஸ்லிம்கள் அப்பாடத்தைத் திருப்பி வாசிப்பார்கள் என்பது திண்ணம்.

நமது சென்னை மாகாணத்தில் தோழர் உஸ்மான் அவர்கள் சில ஆண்டுகளுக்குமுன்னர் கவர்னராக இருந்தபோது சட்டசபையில் "உஸ்மான் என் கால் தூசுக்குச் சமானமானவர்" என்று காலஞ்சென்ற சத்தியமூர்த்தி அய்யர் பேசினாராம். அந்தப் பாடத்தை இப்போழ்து இடைக்கால சர்க்காரில் முஸ்லிம் லீக் அங்கத்தினர்கள் திருப்பி வாசிக்கா வண்ணம் பார்த்துக்கொள்ள வேண்டியது காங்கரஸ்காரர்களின் பொறுப்பு முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும் என்ற உண்மையைக் காங்கரஸ்காரர்கள் உணர்ந்திருப்பார்கள் என்று நம்புகின்றோம். காரணம் அவர்கள் அனுபவப்பட்டவர்கள். காங்கரஸ்காரர்கள் ஆட்சி மன்றத்தில் அமர்வதற்குமுன்னர் நாட்டு மக்களுக்கு எந்தப்பாடத்தைக் கற்பித்துக் கொடுத்தனரோ அதே பாடம் காங்கரஸ்காரர்கள் ஆட்சி மன்றத்தில் அமர்ந்தபின்னர் நாடெங்கும் பொதுமக்களால் வாசித்துக் காட்டப்படுகின்றதைக் கண்கூடாகக் காண்கின்றனர்.

அதே நிலைமை இடைக்கால சர்க்காரிலும் நடைபெறாமலிருக்கும் என்று கூறுவதற்கில்லை. எனவே ஜவகரும் அவர் சகாக்களும் புத்திசாலித்தனமாக நடந்துகொள்வார்களாக.

---

## இந்துமதம் ஒழிந்தால் வெற்றியுறுதி

(ஓர் முஸ்லிம் தோழர்)

இஸ்லாம் மார்க்கம் இந்தியாவுக்கு வந்ததினால்தான் சாதி வேறுபாடு நீக்க ஓர் வகையிலாவது வழியேற்பட்டது. கிருஸ்து மதம் வந்ததால் தாழ்த்தப்பட்டவர்கள் சிறிதளவாவது கல்வியறிவுபெற வாய்ப்புக்கிடைத்தது! ஆனால் இந்துமதம் பார்ப்பனர்களும் அவர்கள் மனைமக்களும் நலம்பெற்று இன்பமுடன் வாழ்வதற்கு வழிதேடிற்றே யொழிய ஏனைய மக்கள் எவ்வகை நன்மையுமடையும்படி வழிதேடவில்லை.

இந்து மதம் பார்ப்பனர்கள் கோயில் குளங்களின் வாயிலாகவும், சாஸ்திரத்தின் வாயிலாகவும், திரைய பொருள் சேகரிப்பதற்கு வழிதேடியுள்ளது. ஏனையோர் சுவர்க்கம் போய் சேராவிடினும் பூலோகத்திலாவது நன்மை கொஞ்சமாவது கண்டோம் என்று சொல்லக்கூட ஒரு வழியும் இந்துமதம் தேடவில்லை எனவே இதுசமயம் முஸ்லிம் தோழர்களையும், கிருஸ்துவர்களையும் பகைத்துக்கொள்ளாமல் இந்து மதத்தையே குறிப்புவைத்து அதை அழிப்பதையே செயலில் காட்டுங்கள் அடுத்த தேர்தலில் வெற்றி உறுதியாக உங்களுடையதுதான். இந்துமதக் கொள்கையை அடிப்படைக்கொள்கையாகக் கொண்ட காங்காஸ் முஸ்லிம்களாலேயே தோற்கடிக்கப்படும் என்று நினைக்கத் தூண்டுகின்றன, ஆங்காங்கு நடைபெறும் கலக அறிகுறிகள்:

---

(8ம் பக்கத் தொடர்ச்சி)

காரர்கள் அதாவது பெரிதும் பார்ப்பனர்கள், தங்களுக்கு வேறு ஒரு அரசியல் சபை வைத்திருக்கிறார்கள். கிருஸ்தவர்கள், சீக்கியர்கள் முதலியவர்களுக்குத் தனித்தனியே அரசியல் ஸ்தாபனங்கள் இருக்கின்றன இவ்வளவும் தவிர்த்து இவ்வளவுக்கும் மாறுபட்டவராக 9, 10 கோடி முஸ்லிம்களுடைய சபை ஒரு தனி அரசியல் ஸ்தாபனமாக இருக்கிறது இவற்றின் கொள்கைகளில் பெரிதும் மற்ற ஸ்தாபனங்களுடன் தங்களுக்கு உள்ள ஜாதி மத முரண்பாடுகளைக் காட்டுவதுதான் முக்கியமானவைகளாக இருக்கின்றன. அவற்றுள் மதம், ஜாதி, வகுப்பு உணர்ச்சிகளே தலைசிறந்து நிற்கும்.

காங்கரஸ்காரர்கள் தங்கள் ஸ்தாபனத்தைப் பொது அரசியல் ஸ்தாபனம் என்று பாத்தியம் கொண்டாடினாலும், காங்கரஸ்காரர்கள் வேண்டுவது ராமராஜ்யம் அல்லது இந்துராஜ்யம் என்று சொல்லப்படுகிறது. இந்துமகாசபையாரும் அதையே சொல்லுகிறார்கள் இதன் பயனாகத் திராவிடர்கள் தனித்துக்கொள்ள வேண்டியவர்களாகி விட்டார்கள். முஸ்லிம்களும் அப்படியே தனித்துக் கொள்கிறார்கள். தீண்டப்படாத மக்கள் சங்கத்துக்குப் பணம் படிப்பு, சமுதாய சமத்துவம் இல்லாததால், அது சரியான வகுப்பு உரிமை அடிப்படையின் மேல் இருந்தாலும், போதுமான செல்வாக்கில்லாமல் இருக்கிறது. இதுபோலவே கிறிஸ்தவர்களும் எண்ணிக்கையில் மிகக் குறைந்தவர்களானதால், தனிச் சங்கம் வைத்திருந்தாலும், சமயம்போல் ஒவ்வொரு சமயம் ஒவ்வொன்றைத் தழுவி,பயன் அடைவது நல்லதென்று கருதுகிறார்கள். வருணாச்சிரமக்காரரும் மிகச்சிறு கூட்டக்காரராகக் கருதப்பட்டாலும், இந்து மகாசபை, காங்காஸ் இவற்றின் மறைவான ஆதரவால் சமுதாயத் துறையில் தங்களுக்கு உள்ள உயர்வைக் காப்பாற்றிக்கொள்வதையே அரசியல் கொள்கையாகக்கொண்டுள்ளனர். இவற்றில் ஒன்றாவது பிரிட்டிஷ் கவர்ன்மெண்டு இந்த நாட்டைவிட்டுப் போய்விட வேண்டும் என்று சொல்ல முன் வருவதில்லை.

(தொடரும்)

ஓ. எம். சுப்பிரமணியன்.



(2-ம் பக்கத் தொடர்ச்சி)

பற்றி அவர்களுக்குள் சண்டை இல்லை; அவற்றைக் காப்பாற்ற அவர்கள் தொல்லைப்படுவதுமில்லை.

## கீழ்நாட்டில் மதம்

கீழ்நாட்டின் மதம் அப்படி இல்லை; அது வாழ்க்கையின் ஒவ்வொரு துறையையும் ஆக்கிரமித்துக்கொண்டிருக்கிறது. தலைமயிர் முதல் கால் செருப்பு வரை மதத்துக்குச் சம்மதப்படுத்தப்பட்டிருக்கின்றன. நடை, உடை, பாவனை, ஆகாரம், கல்வி, மரணம், வாழ்வு, தொழில், பணம் சேர்த்தல், பணம் செலவு செய்தல், உபகாரம், தர்மம், எல்லாம் மத ஆதிக்கத்தில், மதப்பிரவேசத்தில் இருக்கின்றன. இங்கு ஒரு மனிதனைக் கண்டவுடன் இவன் இன்ன மதத்தவன் என்று சொல்லும் வண்ணம் அவனுக்கு ஒரு தனி வேஷம் வேண்டி இருக்கிறது. சரீரத்துக்கு உள் இருக்கும் மத உணர்ச்சியைவிட, சரீரத்துக்கு வெளியில் காட்டப்படும் மத உணர்ச்சியே சிறந்ததாகக் கொள்ளப்படுகிறது. நம்நாட்டு அதாவது கீழ்நாட்டு மதத்துக்குப் பெயரிலேயே தர்க்கம், அந்தப்பெயருக்கும் ஆதாரம் கிடையாது. மத ஆதாரத்துக்கும் தர்க்கம்; அவை எல்லோருக்கும் ஒன்றுபோல் இல்லை. மதகர்த்தர் ஒருவரல்ல; மதக்குறி ஒன்றல்ல; மதப் பிரார்த்தனை ஒன்றுபோல் இல்லை.

மதக் கடவுள்கள் பல! அவைகளின் சரித்திரங்கள் விபரீதம். அதன் பயனால் ஜனசமூகம் பிரிக்கப்பட்டிருக்கிறதே தவிர, ஒன்றுபடுத்தப்படவில்லை. சடங்குகள், பிரார்த்தனைகள் முதலியவை பொருளாதாரக் கேட்டுக்கும், ஒருவரை ஒருவர் சுரண்டுவதற்கும் ஏற்றவண்ணமே வழக்கப்படுத்தப்பட்டு வருகிறதனால் ஒரு வகுப்பு உயர்வும், ஒரு வகுப்பு தாழ்வும் ஆகிவருகிறது. மதத்தால் நாடுகெட்டது; மனித சமுதாயம் கீழ் நிலை அடைந்தது என்று சொல்லும்படியான நிலை அதிகரித்து வருகிறது.

மதத்தைக் காப்பாற்றுவதன் பயனாய் மக்கள் ஜீவனை இழக்கும்படியான தொல்லை அனுபவிக்கின்றனர், சுருங்கச் சொன்னால், மதத்தால், மக்கள் வேறுபாடும், குரோதமும் ஏற்பட்டு, மனிதாபிமானம் இல்லாமல் நாடு துன்பத்தை அனுபவிக்கிறது என்று சொல்லலாம்.

## கல்வி

### மேல்நாட்டில் கல்வி

மேல்நாட்டின் கல்வி பெரிதும் பகுத்தறிவையும், விஞ்ஞானத்தையும், ஆராய்ச்சியையும் பொருத்தது என்பதோடு, அவைகளுக்கு அனுகூலமான கல்வியே அங்கு நடைபெறுகிறது, அதுவும் அங்கு 100க்கு 65-80 பேர் கல்வி கற்று இருக்கிறார்கள். அப்படி கற்றிருப்பதிலும் மதத்தையோ, மத பக்தியையோ கொண்டுவந்து அக்கல்வியில் புகுத்துவதில்லை: அங்கு படித்தவன் என்று சொல்லப்படுபவன், ஒரு பகுத்தறிவாளியாகவும், உலக ஞானமுள்ளவனாகவும், விஞ்ஞானியாகவும், ஆராய்ச்சிக்காரனாகவும் இருப்பானே ஒழிய, மத பண்டிதனாகவும், மூட நம்பிக்கைக்காரனாகவும், மத ஆராய்ச்சிக்காரனாகவும், குறுகிய புத்தி உள்ளவனாகவும் இருக்கவே மாட்டான். படிப்பின் மூலம் பொது ஞானத்தை விருத்தி செய்துகொள்ளத்தக்க சௌகரியம் ஏற்படும்படியான படிப்பே பெரிதும் கொடுக்கப்படும்.

அங்குள்ள கலாசாலை, சர்வகலா சாலை என்பவை உலகபொது அறிவு பண்டிதத் தன்மைக்குப் பயன்படுபவைகளாகவே இருக்கும். பாட புத்தகங்களில் மூடநம்பிக்கை சரித்திரங்களோ, மத பக்தி கலைகளோ ஆதிக்கம் செலுத்தாமல் இருக்கும்படியாய் இருக்கும். எப்படிப்பட்ட கல்வியானாலும் அறிவுக்கும், வாழ்க்கைக்கும் எவ்வளவு பயன்படும் என்பதைப் பொறுத்து இருக்குமே ஒழிய இது ஆஸ்திகமா; நாஸ்திகமா, மத உணர்ச்சி இருக்குமா, மத உணர்ச்சி போகுமா, இது பழய கால நிலையை அனுசரித்ததா, புதிய முறை புகுத்துவதா என்கின்ற கவலை கொண்டதாக இருக்காது. பழயகால நிலையைப் போதிக்கும் கல்வியானது விஷயத்தைத் தெரிந்துகொள்ள மாத்திரம் பயன்படத்தக்கதாக இருக்குமே ஒழிய, பழய காலநிலைக்கு நம்மைக் கொண்டுபோகும்படியானதாக இருக்காது. கல்வியின் தொகுப்பே பெரிதும் பரிசுத்தமான பகுத்தறிவையும், விஞ்ஞானத்தையும் அடிப்படையாகக் கொண்டதாக இருக்கும்.

அங்கு கொடுக்கப்படும் கல்வி, புதிய ஆயுதங்களைக் கண்டுபிடிக்கத் தக்கதாய் இருக்கும். மனித வாழ்க்கையை நாளுக்குநாள் சௌகரியப்படுத்துவதாகவும், முற்போக்கு அளிக்கத்தக்கதாகவும், மனிதனுடைய அறிவிலும் முயற்சியிலும் நம்பிக்கை அளிக்கத் தக்கதாகவும் இருக்கும். அதனால் அறிவாளிகளும், முயற்சியாளர்களும் அங்கு அதிகம். அதனால் அந்நாட்டுக்குப் பல நன்மைகள் உண்டாகின. பல அற்புதங்கள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன.

### கீழ்நாட்டில் கல்வி

இந்தியாவின் கல்வி பகுத்தறிவை இலட்சியம் செய்வதில்லை; உலக பொது ஆராய்ச்சிக்கு மதிப்பு வைப்பதில்லை. அவைகளுக்கு ஏற்ற கல்வி இங்கு தொகுக்கப்படவே இல்லை. கொடுக்கப்பட்டிருப்பதும், பெரும்பான்மை மக்களுக்கு 100க்கு 6, 7-பேர்களுக்குத்தான். அப்படிப்பட்ட கல்வியின் ஒவ்வொரு துறையிலும் பகுத்தறிவுக்குப் பொருந்தாத மதம் தாண்டவமாடும். மதத்துக்காகவே கல்வி என்றும், கல்வியினால் மத பக்தி ஏற்பட வேண்டுமென்றே கருதப்பட்டும், அவைகளின் தத்துவங்களையே கல்வியில் பெரிதும் புகுத்தப்பட்டிருக்கின்றன.

இங்கு மத சம்பந்தமான நிபுணத்துவமும், உணர்ச்சியும் உள்ளவன்தான் படித்தவனாகவும் பண்டிதனாகவும் கருதப்படுகிறான். இந்நாட்டு பண்டிதனுக்கு உலக சரித்திர ஆராய்ச்சியோ பெறவேண்டும் என்கின்ற கவலை இல்லை. அதில்லாமலே பண்டிதனாய் விடுகிறான். நல்ல பண்டிதன் என்பவன் பெரிதும் நல்ல மூட நம்பிக்கைக்காரனாகவும், பகுத்தறிவில் இலட்சியமில்லாதவனாகவும் குறுகிய பிடிவாதக்காரனாகவுமே இருக்கிறான்.

படிப்பைத் தொடுப்பவர்களுக்குப் படிப்பின் மூலம் பொது ஞானமும் பகுத்தறிவும் ஏற்பட வேண்டும் என்கின்ற கவலை இருப்பதில்லை. தங்களுக்கென்று ஏற்பட்ட பழய பழக்க வழக்கம், மத தத்துவம் முதலியவைகள்தான் மிகுதியும் கவனிக்கப்படு

அவைகளுக்கு ஏற்றபடி பாடங்கள் தொகுக்கப்படுகின்றன.

சிறு பிள்ளைகளுக்குக் கொடுக்கும் பாட புத்தகங்களிலேயே மூட நம்பிக்கை கொண்ட புராணகதைகள் புகுத்தப்பட்டு விடுகின்றன.

இங்கு கல்வி கொடுப்பவர்கள், இந்தக் கல்வியினால் பிள்ளைகளின் அறிவு வளர்ச்சிக்கோ, வாழ்க்கைக்கோ எவ்வளவு பயன் ஏற்படும் என்பதை முக்கியமாய்க் கவனிப்பதில்லை எந்தக் கல்வியை எடுத்தாலும், இது ஆஸ்திகமா? நாஸ்திகமா? இதனால் மத உணர்ச்சி அதிகமாகுமா? குறையுமா? இது நம் பழயகால நிலைக்கு நாகரிகத்துக்கு ஏற்றதா? அல்லது இது நம்மை புதிய உலகமாக்கி விடுமா? என்று பயந்து நடுங்கி, ஆஸ்திகம், மதம், பழயகால நிலை, ஆகியவைகளை முக்கியமாய் நினைத்து அதற்கேற்ற கல்வியையே மக்களுக்குள் புகுத்தப் பார்ப்பார்கள். இங்கு கல்வி கற்றவன் விஞ்ஞான கல்வி பட்டம் பெற்றவன் உடனே பழய கால நிலைக்குப் போக ஆரம்பிக்கிறான். அது சரியா தப்பா என்று ஆராயுங்கல்வியைக் கூடாத கல்வியாக மதிக்கப்படுகிறது.

சகலத்திலும் பகுத்தறிவைப் பயன்படுத்தும் துணிவும் சுதந்திரமும் உண்டாக்கும் கல்வியை இங்கு நாஸ்திகமாகவும், மத விரோதமாகவும். தேசியத்துக்கு விரோதமாகவும் கருதப்படுகிறது.

இந்நாட்டுப் பழங்கால நிலை, பழங்கால மதம், பழங்கால பெருமை முதலியவைகளில் நிபுணர்களான எந்தப் பண்டிதர்களிடமிருந்தும் நாளது வரை ஒருவிதமான புதிய உணர்ச்சியோ, அற்புதங்களோ, முன்னேற்றத்துக்கான சாதனமோ ஒன்றும் கண்டு பிடிக்கப்படவில்லை. இங்கு கண்டு பிடிக்கப்பட்டவைகள் எல்லாம் முன்னோர்கள் செய்த நூல்கள் என்பவைகளுக்குப் புதிய உரைகளும், புதிய கருத்துக்களும், புதிய தத்துவார்த்தங்களும், புதிய பெருமைகளுமே அல்லாமல், எவ்வித புதிய கருத்துக்கள் கொண்டதோ, புதிய கருத்துக்கள் கண்டுபிடிக்கும் எண்ணத்தைக் கொண்டதோ காணப்படவில்லை.

இந்த நாட்டு கல்வியின் பயனாய் வாழ்க்கையின் எந்தத்துறையிலும் பழமையிலிருந்து எவ்வித மாறுதலோ எவ்வித சௌகரியமோ, சுருக்கமோ ஏற்படவே இல்லை. ஏதாவது ஏற்பட்டிருந்தால் அது புரட்சியின் பயனாலேயே ஒழிய கல்வியால் என்று சொல்லதக்கதாயில்லை.

இவ்விடத்திய கல்வி மனிதனுடைய சொந்த அறிவுக்கு மதிப்பு கொடுப்பதில்லை. முன்னோர்கள் சொன்னதைப் பகுத்தறிவைக்கொண்டு ஆராய்ச்சி செய்யக்கூடாது என்பதே பல விஷயங்களில் கல்வியின் பயனாக இருக்கிறது. இவ்விடத்திய படிப்பின் கட்சி நிலை, தொட்டதை எல்லாம் கடவுள் செயல் என்று சொல்லி முயற்சியை அலட்சியப் படுத்தவும் சோம்பேறியாக உட்காரவுமே பயன்படுகிறது. அதனால் சோம்பேறிகளும், சாதுக்களும், சன்னியாசிகளும் இங்கு அதிகமாக ஆகி விடுகிறார்கள். இவர்களால் பொருளாதார வீண் செலவும், முன்னேற்றத்தடையும் அல்லாமல் வேறு காரியம் ஆவதில்லை.

## அரசியல்

### மேல்நாட்டில் அரசியல்

மேல்நாட்டு அரசியல் விஷயத்திற்கும், கீழ்நாட்டு அரசியல் விஷயத்திற்கும் முன்குறிப்பிட்ட விஷயங்களைப் போலவே ஏராளமான பேதங்கள் இருக்கின்றன.

மேல்நாட்டில், ஒவ்வொரு நாட்டிலும் ஏதோ சில கொள்கைகளின்மீது அரசியல் கட்சிகளும், போராட்டங்களும் நடைபெறுகின்றன. ஏனெனில் அங்கு வேறு வகுப்புகள், மதங்கள் கீழ்—மேல் பிறவி பேதங்கள் முதலிய இல்லாததால் வெறும் அரசியல் கொள்கைகளை மாத்திரம் வைத்து கட்சிகள் நடக்கவும், கட்சிகள் பதவிக்கு வந்தாலும் அங்கு அந்நாட்டுக்கு நன்மையான கொள்கைகளைப்பற்றி மாத்திரம் ஆட்சி நடத்தவும், வாதப் பிரதிவாதம் உண்டாகவும், வெளி நாட்டான் சுரண்டாமலும், வெளி நாட்டான் கைப்பற்றாமலும் இருக்கும்படியான பொருளாதாரம் கைத்தொழில் ராணுவம் முதலியவைகளைப்பற்றிச் சிந்திக்கவும், பொது மக்களின் பொருளாதாரம், வாழ்க்கை நலம் ஆகியவைகளைப்பற்றித் திட்டங்கள் வகுக்கவும், தேடவுமான காரியங்கள் நடைபெறுகின்றன. யாவரும் ஒரே இனம், யாவர்க்கும் ஒரே இன பாஷை, இவைகளுக்கேற்ற கண்டிப்பான எல்லை ஆகியவை இருப்பதால், பிறவி, வகுப்பு உணர்ச்சி முதலியவைகளுக்கு இடமில்லாமல் ஆட்சிநடந்து பொருளாதாரமும் வாழ்க்கை நலமும் யாவருக்கும் ஒன்றுபோலவே பெருகிக்கொண்டே வருகின்றன: இதற்கான கொள்கைகளே கட்சிப்போராட்டத்திற்கு அஸ்திவாரமாய் இருந்து வருகிறது: ஒவ்வொரு நாட்டாரும் மிக்க சிறு தொகையினராக இருந்தும் மற்ற நாட்டு ஆதிக்கம், மற்றநாட்டான் தலைமை எதிலும் இல்லாமல் பார்த்துக்கொள்வதும் அரசியல் காரியமாக இருந்துவருகிறது.

### கீழ்நாட்டில் அரசியல்

இந்த நாட்டு அரசியல் கிளர்ச்சி என்பது ஏற்பட்டு 50 வருட காலமானாலும், அது பெரிதும் உத்தியோகம் ஒரு குறிப்பிட்ட வகுப்பாரிடம் வருவதற்காகவே செய்யப்பட்டதாக இருந்து அதன் பயனாக மத வகுப்பு ஜாதி சச்சரவுகள் ஏற்பட்டு, இன்று அரசியல் வகுப்புக் கொள்கையைப் பற்றியதும், பிறவி ஜாதியைப்பற்றியதும், மதத்தைப் பற்றியதுமாக விளங்கி வருகிறது.

அரசியல் கட்சிகளைப் பற்றிப் பேசும்போது, ஜாதி மத வகுப்புகளைப்பற்றித்தான் பேச முடிகிறதே தவிர, கொள்கைகளைப்பற்றிய பேச்சு முக்கியமானதாக இல்லை.

இங்கு காங்கரசு என்று சொல்லப்படுவதை, இந்துக்களே பொதுஜன சபை என்று ஒப்புக்கொள்ளாமல், இந்துமகாசபை என்று ஒன்றை, இந்துக்கள் பொது அரசியல் சபையாகக் கொண்டாடுகிறார்கள். இந்த இரண்டையும் ஒப்புக்கொள்ளாத பார்ப்பனரல்லாதார் சபை திராவிடர் கழகம் என்று ஒன்று சென்னை, பம்பாய், மத்திய மாகாணம், ஆகியவைகளில் இருந்து வருகிறது. இதன் மத்தியில் ஆதிதிராவிடர் என்று தாழ்த்தப்பட்ட தீண்டாத வகுப்பைச் சேர்ந்த பல கோடி மக்களுக்கு ஒரு தனி அரசியல் சபை இருக்கிறது, வர்ணாச்சிரமக்

(தொடர்ச்சி 6-பக்கம்)

Edited, Printed, and Published by N. Karivaradaswamy at the Tamilan Press 42, Catchery street, ERODE.